

சென்னை மாவட்டம், நங்கநல்லூர், நேரு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளான நேற்று (15.7.2023) கல்வி வளர்ச்சி நாளையொட்டி நடைபெற்ற விழாவின் போது பள்ளி மாணவ, மாணவியர்களுடன் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாடினார்.

## டெல்லியை சூழ்ந்த வெள்ளம்!

டெல்லி, ஜூலை 16 -

வட மாநிலங்களில் கடந்த சில நாட்களாக கனமழை கொட்டித் தீர்த்து வருகிறது. இதன் காரணமாக பல பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் தலைநகர் டெல்லியில் 40 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு கனமழை கொட்டித்தீர்த்தது. மழை மேலும் தொடரும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கனமழை காரணமாக யமுனை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. யமுனை ஆற்றின் நீர் மட்டம் அபாய அளவை தாண்டியுள்ளது. இதன் காரணமாக தலைநகர் டெல்லியின் பல்வேறு பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை யமுனை ஆற்றின் நீர் மட்டம் 208.66 மீட்டராக இருந்த நிலையில் அந்த அளவு தற்போது சற்று குறைந்துள்ளது. தற்போதைய நிலவரப்படி ஆற்றின்நீர் மட்டம் 207.62 மீட்டராக உள்ளது.

### பொதுவுடைமை லட்சியங்களைக் கடைப்பிடிப்பதில்

## நம் எல்லோருக்கும் வழிகாட்டியாக விளங்குபவர்!

### சங்கரய்யா 102வது பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூலை 16-

சங்கரய்யா அவர்களின் 102 ஆவது பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**பொதுவுடைமை இயக்கத்தின் முதுபெரும் தலைவர் 'தகைசால் தமிழர்' சங்கரய்யா அவர்களின் 102ஆவது பிறந்தநாள்!**

**பொதுவாழ்விலும் பொதுவுடைமை இலட்சியங்களைக் கடைப்பிடிப்பதிலும் நம் எல்லோருக்கும் வழிகாட்டியாக விளங்கும் அவர் நலமுடன் வாழிய பல்லாண்டு!**



இவ்வாறு தமது வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### மக்களைத் தேடி மருத்துவத் திட்டம் – குறைந்த வருவாய் கொண்டோர்

## மருத்துவச் செலவு பாதியாகக் குறைந்துள்ளது!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவில் பெருமிதம்!

**சென்னை, ஜூலை 16–**

**குறைந்த வருவாய் கொண்டோரின் மருத்துவச் செலவை, மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் பாதியாக குறைத்து விட்டதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் தெரிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில்,

கல்வியும், சுகாதாரமும்தான் நமது திராவிட மாடல் அரசாங்கத்தின் முதன்மையான இரண்டு கண்கள் என்று தெரிவித்துள்ளார். தி.மு.க. அரசு பதவியேற்றதில் இருந்து, இந்திய மாநிலங்களுக்கிடையில், வளர்ந்த நாடுகளுக்கு இணையாக, தமிழ்நாட்டை தனிச் சிறப்பாக நிலைநிறுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், இந்தத் துறைகளில் பல்வேறு திட்டங்களை விடாமுயற்சியுடன் செயல்படுத்தி வருவதாக அவர் கூறியுள்ளார். மாநில திட்டக்குழு வின் கண்டுபிடிப்புகள் நமது திட்டங்களின் தொலைநோக்கு தன்மைக்கு சான்றாக விளங்குவதாகவும், தமிழ்நாட்டில் உள்ள குறைந்த வருமானம் பெறும் பிரிவினரிடையே மக்களைத்தேடி மருத்துவம் ஏற்படுத்தியுள்ள ஆழமான தாக்கத்தை பற்றியும் "தி இந்து" நாளேட்டில் கட்டுரை வெளியாகியுள்ளதை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். திராவிட மாடல் கொள்கைகளால், தமிழ்நாட்டின் தொடர்ச்சியான வளர்ச்சிக்காக பாடுபடுவோம் என்றும் தனது ட்விட்டர் பதிவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### பொங்கல் பண்டிகையையொட்டி

## இலவச வேட்டி, சேலை திட்டத்திற்கு முன்பணமாக ரூ.200 கோடி ஒதுக்கீடு!

### அரசாணை வெளியீடு!

சென்னை, ஜூலை 16 -

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்காக ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது தமிழ்நாடு அரசு.

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணையில், வரும் பொங்கல் (2024) ஆண்டு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்காக 1,68,00,000 எண்ணிக்கையிலான சேலைகள் மற்றும் 1,63,00,000 வேட்டிகளை உத்தேச உற்பத்தி திட்டமாக நிர்ணயம் செய்து வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களுக்கு வேட்டி, சேலையினை வினியோகிக்கும் நடைமுறையை மேற்கொள்ள ஏதுவாக, கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய்த் துறை தலைமையில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர், வருவாய்த் துறை மற்றும் கைத்தறி ஆணையர் ஆகியோர் அடங்கிய குழுவினை அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் வேட்டி, சேலைகள் பயனாளிகளுக்கு கிடைப்பதை உறுதி செய்ய, நியாய விலைக் கடைகளின் விற்பனை முனையத்தில் வேட்டி சேலைகளை வழங்கும் போது விரல் ரேகை பதிவு செய்யப்பட வேண்டும்.

இதனைத் தவறாது செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஆணையர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கு உத்தரவிடப்படுகிறது என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு அரசின்

## சதுப்பு நில மேம்பாட்டுப் பணிகள் பாராட்டுக்குரியவை!

### கோவளத்தில் மரக்கன்றுகளை நட்டப்பிறகு ஒன்றிய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் பேச்சு!

சென்னை, ஜூலை 16-

செங்கல்பட்டு மாவட்டம், கோவளம் அரசு மேல்நிலைப்பள்ளி அருகே நேற்று முன்தினம் (14.07.2023) கடற்கரை கழிமுகப்பகுதி உவர் நிலங்களில் சுற்றுச்சூழல் காத்திடும் அலையாத்தி காடுகள் உருவாக்கிட மிஷ்டி இயக்கம் மூலம் அலையாத்தி மரக்கன்றுகளை ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் நடவு செய்தார்.

இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டின் இரண்டாவது அதிக பரப்பளவினை கொண்ட கடற்கரை சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புயல் சீற்றத்தினை தடுத்திட அலையாத்தி காடுகள் மேம்பாடு மிகவும் பயனுள்ளதாகும். மிஷ்டி இயக்கத்தின் மூலம் தமிழ்நாடு அரசு முன்னெடுத்துள்ள கடற்கரை கழிமுகப்பகுதிகளான, உவர் நிலங்களில் உள்ள அலையாத்தி காடுகளை பாதுகாப்பதிலும், புதியதாக அலையாத்தி மரக்கன்றுகளை வளர்ப்பதில் சமூக ஆர்வலர்களுடன் மேற்கொண்டு வரும் பணிகள் பாராட்டுக்குரியதாகும் என்றும், அலையாத்தி காடுகள் வளர்ப்பு மற்றும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு வனத்துறை, சமூக ஆர்வலர்கள், கடற்கரை பகுதி கிராம மக்கள், மாணவர்களை ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை திருமதி சுப்ரியா சாகு, தமிழ்நாட்டின் கடற்கரை உவர்நிலங்களில் அலையாத்தி காடுகள் மிஷ்டி இயக்கம் மற்றும் ஈரநில இயக்கம் திட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதிக அளவு பரப்பளவில் அலையாத்தி காடு மரக்கன்றுகள் நடப்படுவதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கவும், கார்பன் சமநிலை ஏற்படுத்தவும் தமிழ்நாடு அரசு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய அரசின் சிறப்புச் செயலாளர் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை சந்திர பிரகாஷ் கோயல், உலக சுகாதார நிறுவன ஆலோசகராக செயல்பட்ட திருமதி சௌமியா சுவாமிநாதன், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) சுப்ரத் மஹாபத்ர, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ரா.ரெட்டி, சென்னை மண்டல தலைமை வனப்பாதுகாவலர் திருமதி கௌ. கீதாஞ்சலி, மாவட்ட வன அலுவலர் ரவி மீனா, சென்னை வன உயிரின காப்பாளர் ஈ.பிரசாந்த் மற்றும் கிராம பொது மக்கள், சமூக ஆர்வலர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

### விருதுநகர் – இலுப்பையூர் கிராமத்தில்

## ரூ. 120 இலட்சம் மதிப்பில் புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டுமானப் பணி!

### அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைத்தார்!

விருதுநகர், ஜூலை.16-

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், இலுப்பையூர் கிராமத்தில், ரூ.120 இலட்சம் மதிப்பில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்டும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் 4 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம், மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் பயன்பெறும் 5 பயனாளிகளுக்கான மருந்து பெட்டகம், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ் 1 மாணவருக்கு மூக்கு கண்ணாடி உள்ளிட்டவற்றை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் மூலம் மருத்துவ சேவைகள் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் செயலாற்றி வருகிறது. கடந்த ஈராண்டு ஆட்சியில் அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் தரம் மற்றும் சேவைகள் மிகப்பெரிய அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது.

நரிக்குடி சுற்றுவட்டாரப் பகுதி மக்கள் மருத்துவ சேவைகளுக்காக சுமார் 10 முதல் 15 கி.மீ. தூரமுள்ள திருச்சுழி செல்ல வேண்டியுள்ளதால், இப்பகுதியில் மருத்துவ சேவை வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கையின் அடிப்படையில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்ற முக்கியத்துவத்தை பல முறை வலியுறுத்தி, தற்போது இலுப்பையூரில் ரூ.120 இலட்சம் மதிப்பில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்த புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தில் பிரசவ அறை, பிரசவ வார்டு, மருத்துவ அலுவலர் அறை, ஊசி போடும் அறை, மருந்து கட்டும் அறை, அவசர சிகிச்சை வார்டு, ஆய்வகம், மருந்தகம், தொற்று நோய் சிகிச்சை பிரிவு உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் 3250 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட உள்ளது என நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் செல்வராஜன், துணை இயக்குநர்(சுகாதாரப்பணிகள்) மரு.யசோதாமணி(விருதுநகர்), அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் கணேசன், திருச்சுழி ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் பொன்னுத்தம்பி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாபா போஸ், வட்டாட்சியர், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட அரசு அலுவலர்கள், மருத்துவப் பணியாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி வட்டம், இலுப்பையூர் கிராமத்தில், ரூ.120 இலட்சம் மதிப்பில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்டும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் (14.07.2023) அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்து 4 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார்.

### நமது அனைவரின் மகிழ்ச்சி நிலவை தாண்டியுள்ளது!

## இந்திய விண்வெளி சாதனைப் பயணத்தில் மற்றொரு மைல்கல் சந்திரயான் -3

### 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜூலை, 16-

அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் விண்கலம் நிலவில் தலையிறங்கிய நிலையில் 4வது நாடாக இந்தியா அந்த சாதனையை எட்டிப் பிடித்துள்ளது. இதனால் நமது அனைவரின் மகிழ்ச்சி நிலவை தாண்டியுள்ளது என 'தினகரன்' நாளேடு 15.07.2023 தேதியிட்ட இதழில் 'நிலவை தாண்டிய மகிழ்ச்சி' என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) நிலவை ஆய்வுசெய்ய கடந்த 2008ம் ஆண்டு சந்திரயான் 1 விண்கலத்தை விண்ணில் செலுத்தியது. அது, நிலவில் தண்ணீர் இருப்பதற்கான ஆதாரங்களை உறுதிசெய்தது. இதையடுத்து, நிலவில் தரையிறங்கி ஆய்வுசெய்யும் நோக்கில் சந்திரயான் 2 திட்டத்தை செயல்படுத்த இஸ்ரோ முடிவு செய்து, நவீன வசதிகளுடன் சந்திரயான் 2 விண்கலத்தை உருவாக்கியது. இந்த விண்கலம், 2019ம் ஆண்டு ஜூலை 2ம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. ஆனால், தொழில்நுட்ப கோளாறு காரணமாக லேண்டர் சரியாக தரையிறங்காமல் நிலவில் மோதி செயலிழந்தது. அதேநேரம், விண்கலத்தின் மற்றொரு பகுதியான ஆர்பிட்டர் நிலவின் சுற்றுப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.



தினகரன்

ஜூலை 15, 2023 சனிக்கிழமை

நிலவை தாண்டிய மகிழ்ச்சி

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) நிலவை ஆய்வுசெய்ய கடந்த 2008-ம் ஆண்டு சந்திரயான்-1 விண்கலத்தை விண்ணில் செலுத்தியது. அது, நிலவில் தண்ணீர் இருப்பதற்கான ஆதாரங்களை உறுதிசெய்தது. இதையடுத்து, நிலவில் தரையிறங்கி ஆய்வுசெய்யும் நோக்கில் சந்திரயான்-2 திட்டத்தை செயல்படுத்த இஸ்ரோ முடிவு செய்து, நவீன வசதிகளுடன் சந்திரயான்-2 விண்கலத்தை உருவாக்கியது. இந்த விண்கலம், 2019-ம் ஆண்டு ஜூலை 2-ம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. ஆனால், தொழில்நுட்ப கோளாறு காரணமாக லேண்டர் சரியாக தரையிறங்காமல் நிலவில் மோதி செயலிழந்தது. அதேநேரம், விண்கலத்தின் மற்றொரு பகுதியான ஆர்பிட்டர் நிலவின் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில், சந்திரயான் 3 திட்டம் சுமார் ரூ.615 கோடியில் தயாரானது. இந்த விண்கலம், ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து நேற்று பிற்பகல் 2.35 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது. இது, அடுத்த 16வது நிமிடத்தில், பூமியில் இருந்து 179 கிமீ உயரத்தில் உள்ள நீள் வட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலை நிறுத்தப்பட்டது. "சந்திரயான் 3, இந்தியாவின் விண்வெளி பயணத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதுகிறது. ஒவ்வொரு இந்தியனின் கனவுகளையும், லட்சியங்களையும் கொண்டு உயர செல்கிறது. நமது விஞ்ஞானிகளின் புத்திக்கூர்மைக்கு தலை வணங்குகிறேன்" என பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

"இந்திய விண்வெளித் துறையில் பொன் எழுத்துக்களால் இந்நாள் பொறிக்கப்படும். சந்திரயான் 3 நம் தேசத்தின் கனவு, நம்பிக்கையை சுமந்துசெல்கிறது" என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டியுள்ளார். ஏற்கனவே, அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் விண்கலம் நிலவில் தரையிறங்கிய நிலையில், 4வது நாடாக இந்தியா அந்த சாதனையை எட்டிப்பிடித்துள்ளது. நிலவின் தென்துருவத்தில் தரையிறங்க உள்ள முதல் விண்கலம் என்ற பெருமையை சந்திரயான் 3 பெற்றுள்ளது. சந்திரயான் 3 விண்கலம் மொத்தம் 3,900 கிலோ எடை கொண்டது.

இதில் உள்ள உந்துவிசை பகுதி 2,148 கிலோ எடையும், லேண்டர் பகுதி 1,758 கிலோ எடையும் மற்றும் ரோவர் 26 கிலோ எடையும் கொண்டுள்ளது. இந்த விண்கலம், தனக்கு தேவையான ஆற்றலை உருவாக்கிக் கொள்ள, இதன் ஒவ்வொரு பகுதியிலும் சூரியஒளி தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் உந்துவிசை தொகுதி 758 வாட்ஸ், லேண்டர் 738 வாட்ஸ் மற்றும் ரோவர் 50 வாட்ஸ் அளவிற்கு ஆற்றலை உருவாக்கும் திறன் கொண்டுள்ளது. விநாடிக்கு 3 மீட்டர் வேகத்தில் தரையிறங்கினாலும் சேதம் அடையாத வகையில் லேண்டரின் கால்கள் வலுவானதாக வடிவமைக்கப்பட்டுள்ளன. விண்வெளி ஆய்வுக்கான இஸ்ரோவின் இந்த அர்ப்பணிப்பு உண்மையிலேயே ஊக்கமளிக்கிறது.

இது, சந்தேகத்திற்கு இடமின்றி புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் முன்னேற்றங்களுக்கு வழி வகுக்கும். சந்திரயான்3 வெற்றிபெறும் பட்சத்தில் நாட்டின் பொருளாதாரம் மற்றும் விண்வெளித்துறையில் வளர்ச்சி கிடைக்கும் என்பதோடு, 600 பில்லியன் டாலர்கள் அதாவது, சுமார் ரூ.50 லட்சம் கோடி மதிப்பிலான விண்வெளி தொழிலில் தற்போது 2 சதவீதம் அளவிற்கு மட்டுமே பங்களித்து வரும் இந்தியாவின் நிலை இன்னும் பல மடங்கு மேம்படும். இந்த சிறப்பான தருணம் என்றென்றும் நம் நினைவில் இருக்கும். ஒவ்வொரு இந்தியனும் பெருமிதம் கொள்ளும் நாள் இந்நாள். சந்திரயான் 3 விண்கலத்தின் சாதனை பயணம் மூலம், நமது அனைவரின் மகிழ்ச்சி நிலவை தாண்டியுள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 'வாட்ஸ் அப்'பில் வந்த செய்தி!

